ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2363/85 - 2023 දෙසැම්බර් මස 22 වැනි සිකුරාදා - 2023.12.22
*2363/85 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ சட்டத்தின் 16(2ஈ) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்**

உத்தேச வடகொழும்பு துறைமுக அபிவிருத்தி திட்டம், கொழும்பு

**சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை**

1988 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க மற்றும் 2011 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க சட்டங்களின் மூலம் திருத்தியமைக்கப்பட்ட 1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க, கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவளங்கள் முகாமைத்துவச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் நியதிகளுக்கு அமைவாக இலக்கம் 19, சைத்திய வீதி, கொழும்பு 01 எனும் முகவரியில் இலங்கை துறைமுக அதிகார சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட உத்தேச வடகொழும்பு துறைமுக அபிவிருத்தி திட்டத்திற்கான சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீட்டிற்கான அறிக்கை பொது மக்கள் ஆய்விற்காக கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் தினமும் முற்பகல் 8.30 இலிருந்து பிற்பல் 4.15 வரை 2023.12.28 ஆந் திகதியிலிருந்து 30 நாட்களுக்கு வைக்கப்பட்டிருக்கும். (வார இறுதி மற்றும் அரச விடுமுறை தினங்கள் தவிர்த்து).

இதற்கு மேலதிகமாக கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவளங்கள் முகாமைத்துவத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.coastal.gov.lk இலும் அவ்வறிக்கை மும்மொழிகளிலும் ஆய்விற்காக முன்வைக்கப்பட்டுள்ளது.

(1) நகர அபிவிருத்தி மற்றும் வீட்டு அமைச்சு, 12 ஆம் மாடி, "செத்சிரிபாய", 2 ஆம் கட்டம், பத்தரமுல்ல
(2) கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவளங்கள் முகாமைத்துவத் திணைக்களம், புதிய செயலகம், 4 ஆம் மாடி, மாளிகாவத்தை, கொழும்பு 10.
(3) மத்திய சுற்றாடல் அதிகார சபை, இல. 104, "பரிசர பியச", டென்சில் கொப்பேகடுவ மாவத்த, பத்தரமுல்ல.
(4) மாவட்ட செயலகம், கொழும்பு
(5) பிரதேச செயலகம், டேம் வீதி, கொழும்பு
(6) மாநகர சபை, கொழும்பு
(7) கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம், மாவட்ட அலுவலகம்,தெஹிவளை

1A - G 41093 – 26 (2023/12)
*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இவ்வுத்தேச திட்டத்தின் காரணமாக சுற்றுச் சூழலுக்கு ஏற்படுகின்ற தாக்கம் தொடர்பான மதிப்பீட்டு அறிக்கை சம்பந்தமான பொது மக்கள் அபிப்பிராயங்களை 2023.12.28 ஆந் திகதியிலிருந்து 30 நாட்களினுள் கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவளங்கள் முகாமைத்துவத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கு எழுத்து மூலமாகச் சமர்ப்பிக்குமாறு அறியத்தருகின்றேன்.

பொறியியலாளர் **ஆர். ஏ. எஸ். ரணவக்க**,
பணிப்பாளர் நாயகம்,
கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவளங்கள் முகாமைத்துவத் திணைக்களம்.

கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவளங்கள் முகாமைத்துவத் திணைக்களம்,
4 ஆம் மாடி,
புதிய செயலகம்,
மாளிகாவத்தை,
கொழும்பு 10.
தொலைபேசி இல. : 011-2449754, 011-2387922, 011-2449197.
தொலைநகல் இல. : 011-2438005, 011-2472623.
மின்னஞ்சல் : dg.ccd.lk@gmail.com

EOG 12-0343

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.